DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO.231/2024**

Deposition of LW1 examined as PW1 — Date: 30.09.2025

| | |
|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Father's/Husband's Name | வீராசாமி |
| Village | சின்னமேடு, தரங்கம்பாடி |
| Taluk | |
| Age | 59/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 30.09.2025
(A1, A2 present)

**முதல் விசாரணை**

இந்த வழக்கானது ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர்நீதிமன்றம்–1 ல் CC,NO 283/2015 U/s. 406, 420, 467,468, 506 (ii) இதசவாக வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு பட்டியல் சாட்சி 1 – கிருஷ்ணமூர்த்தி என்பவரை அ.சா.1 ஆக விசாரணை செய்தும், பட்டியல் சாட்சி 4– முருகவேல் என்பவரை அ.சா.2 ஆக விசாரணை செய்தும், பட்டியல் சாட்சி 6 – முருகன் என்பவரை அ.சா.3 ஆக விசாரணை செய்தும் மற்றும் பட்டியல் சாட்சி 9 – முனுசாமி என்பவரை அ.சா.4 ஆக விசாரணை செய்து குறுக்கு விசாரணை செய்யபடாத நிலையில் ஜெயங்கொண்டம்நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் –2 புதிதாக உருவாக்கப்பட்டதினால் அந்நீதிமன்றத்திற்கு இவவழக்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கானது CC,NO 318/2017, U/s. 406, 420, 467,468, 506 (ii) இதசவாக வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டது. அந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியம் காணாமல் போய்விட்டபடியால் இந்த விபரத்தினை அறிந்த அ.சா.1 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRLOP.NO.16039/2024 ஆக தாக்கல் செய்து முழு விசாரணைக்கு பின்பு மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடந்த 30.08.2024 உத்தரவின் படி மேற்படி வழக்கினை இந்நீதிமன்றத்திற்கு விசாரணை செய்வதற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் அ,சா,1 ன் முதல் விசாரணை சாட்சியம் காணாமல் போய்விட்டது தொடர்பாகவும் பலமுறை அ,சா,1 ஐ மறு விசாரணை செய்வதற்கு எடுத்த முயற்சிகள் எதற்கும் சரியான பதில் கிடைக்கவில்லை என்பதையும் விவரிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் அ.சா.1 ஐ நீதிமன்றத்தில் மறு முதல் விசாரணை செய்யவேண்டிய அவசியம் உள்ளது என்பதால் அ.சா.1 இந்நீதிமன்றத்திற்கு மீண்டும் அழைக்கப்பட்டு மறு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**மறு முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன்.ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது அண்ணன் மகன் சங்கர் என்பவர் சிங்கப்பூரில் வேலை செய்து வந்தார். அவர் மூலமாக எனக்கு ஆஜர் எதிரகள் இருவரும் எனக்கு பழக்கமானார்கள். ஆஜர் எதிரகள் இருவரும் என்னிடம் நாங்கள் வெளிநாடு செல்வதற்கு ஆட்களை எடுத்து அனுப்புகின்றோம். உங்களுக்கு யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் சொல்லுங்கள் என்று கேட்டனர். நான் அதற்கு எனக்கு யாரையும் தெரியாது என்று முதலில் மறுப்பு தெரிவித்து விட்டேன். திரும்ப ஆஜர் எதிரிகள் இருவரும்

V. Krishnamurthy

போன்மூலமாகவும் , நேரிலும் வந்து என்னிடம் தொடர்ந்து ஆட்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள் அவர்களை நாங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கிறோம் என்று கேட்டுக்கொண்டே இருந்தனர்.ஆஜர் எதிரகள் இருவரும் என்னிடம் நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசி, கேட்டுக்கொண்டே இருந்தனர். கடந்த 2005 மற்றும் 2006 ம் ஆண்டுகளுக்குள் எனக்கு தெரிந்த 8 ஆட்களை ஆஜர் எதிரிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். அவர்களில் ஒவ்வொரு நபரும் வெளிநாடு செல்வதற்காக ரூ. 1,80,000/– ஐ பெற்று அதை ஆஜர் எதிரிகளுக்கு கொடுத்தேன். அவர்கள் மேற்படி பணத்தினை ஒவ்வொரு ஆட்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு அவர்களில் 7 ஆட்களை ஆஜர் எதிரிகள் இருவரும் சிங்கப்பூர் அனுப்பி வைத்தனர். 1 நபரான செந்தில் என்பவரை மட்டும் வெளிநாடுக்கு அனுப்பாமல் நிலுவையிலேயே ஆஜர் எதிரகள் வைத்திருந்தனர். மேலும் எனக்கு தெரிந்த 10 ஆட்களை 2006 ம் ஆண்டு 6 வது மாதம் ஆஜர் எதிரிகளுக்கு அறிமுகப்படுத்தினேன். அவர்களில் ஒவ்வொரு நபரும் வெளிநாடு செல்வதற்காக ரூ. 2,00,000/– ஐ பெற்று அதை ஆஜர் எதிரிகளுக்கு கொடுத்தேன். அவர்கள் மேற்படி பணத்தினை ஒவ்வொரு ஆட்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு மேற்படி 10 நபர்களும், செந்தில் என்பவருக்கும் வெளிநாடு செல்வதற்கு விசா, டிக்கெட் போன்றவற்றை என் மூலமாக கொடுக்கச்சொன்னார்கள். நானும் மேற்படி 11 நபர்களுக்கும் அவர்களிடம் இருந்து பெற்ற விசா , டிக்கெட்டுகளை கொடுத்தேன். ஆஜர் எதிரிகள் சொன்னதை நம்பி நாங்கள் அனைவரும் சென்னை விமான நிலையத்திற்கு சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகளின் டிராவல்ஸ் ஏஜென்ட் எங்களிடம் வந்து உங்களுக்கு விசாவானது பிரச்சனையில் இருப்பதால் உங்களை வெளிநாடு அனுப்பமுடியாது, இரண்டு, மூன்று நாட்கள் கழித்துதான் டிக்கெட் போட முடியும் என்றும் நீங்கள் அனைவரும் சென்னையிலேயே தங்குங்கள் என்றும் கூறினார். நான் மேற்படி 11 நபர்களையும் கிண்டியில் ரூம் எடுத்து தங்க வைத்திருந்தேன். நானும் மேற்படி 11 நபர்களும் 15 நாட்கள் அங்கேயே தங்கி இருந்தோம். உங்களுக்கு வழங்கப்பட்ட விசா மூலமாக நீங்கள் வெளிநாடு செல்ல இயலாது என்றும் புதிதான விசா மூலமாக மட்டும் தான் செல்லமுடியும் என்றும் மீண்டும் உங்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்று கூறி எங்களிடம் இருந்து நபர் ஒன்றுக்கு ரூ. 15,000/– ஐ ஆஜர் எதிரிகளின் டிராவல்ஸ் ஏஜென்ட் பெற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு நான் என்னுடன் வந்திருந்த 11 நபர்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்வதற்காகவும், அங்கு தங்கியிருந்த ரூம்வாடகை மற்றும் சாப்பாட்டு செலவிற்காக ரூ.3,00,000/– னை நான் வந்தவர்களிடம் பணத்தினை பெற்றும் என்னுடைய கை காசினை போட்டும் செலவு செய்தேன். அதற்கும் ஆஜர் எதிரிகள் பணம் எதுவும் தரவில்லை. அதன் பிறகு ஆஜர் எதிரிகளின் டிராவல்ஸ் ஏஜென்டும் ,ஆஜர் எதிரிகளும் வேறு விசாவும், டிக்கெட்டும் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் கொடுத்த விசா டிக்கெட் மூலமாக எங்களை சிங்கப்பூருக்கு அனுப்பவில்லை. நாங்கள் மேலும் 1 வாரம் சென்னையிலேயே தங்கி ஆஜர் எதிரிகளிடம் ஏன் இன்னும் எங்களை சிங்கப்பூருக்கு அனுப்பவில்லை என்று கேட்டுக்கொண்டே இருந்தோம். ஆனால் அவர்களிடம் இருந்து சரியான பதில் எதுவும் வரவில்லை. ஆஜர் எதிரிகள் எங்களிடம் வழங்கிய விசா மற்றும் டிக்கெட் போன்றவைகள் போலியானது என்று தெரிந்து அவர்களிடமே விசா மற்றும் டிக்கெட்டுகளை திருப்பி கொடுத்து விட்டேன். அதன்பிறகு நான் ஆஜர் எதிரிகளிடம் பலமுறை உடையார் பாலையத்தில் உள்ள அவர்களது வீட்டிற்கும், அவர்களது அலுவலகத்திற்கும் சென்று கேட்டேன். நாங்கள் பணத்தை இன்னும் 1 வாரத்தில் தருகிறோம், இன்னும் 15 நாட்களில் தருகிறோம் என்று சொல்லி சொல்லி 3 ஆண்டுகளை கழித்தனர். ஆஜர் எதிரிகள் இருவரும் மொத்தமாக ரூ. 24,35,000/– த்தினை

V. Krishnamurthy

எனக்கு தரவேண்டும். அதன் பிறகு நான் கேட்டுப்பார்த்து பணத்தினை ஆஜர் எதிரிகள் திருப்பி தராததால் பெரம்பலூரில் உள்ள மாவட்ட கண்காணிப்பாளரிடம் மேற்படி குற்றம் தொடர்பான புகார் மனுவினை 2009 ம் ஆண்டு 10 வது மாதம் கொடுத்தேன். பெரம்பலூரில் உள்ள மாவட்ட கண்காணிப்பாளர் இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தார்கள். அந்த பேச்சு வார்த்தையின் போது செலவுத்தொகையான ரூ.3,00,000/- த்தினை நிலுவையில் வைக்குமாறும் ( தற்பொழுது சாட்சி தான் செலவு செய்த தொகைரூ.3,10,000/- என்று கூறுகிறார்) மீதி உள்ள தொகையான ரூ.21,25,000/- த்தினை 3 தவணையாக பிரித்து தருவதாக ஆஜர் எதிரிகள் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கூறினர். அதில் முதல் தவணையாக ஆஜர் எதிரிகள் ரூ.8,95,000/- த்தினை கையெழுத்திடப்பட்ட ஐசிஜசிஐ வங்கி காசோலை மூலமாக என்னிடம் கொடுத்தார்கள். மேற்படி என்னிடம் ஆஜர் எதிரிகள் கொடுத்த வங்கி காசோலையினை 6 மாதம் கழித்து வசூலுக்கு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளும் படி கூறினர். நான் திருக்கடையூரில் உள்ள லட்சுமி விலாஸ் வங்கியில் மேற்படி என்னிடம் ஆஜர் எதிரிகள் கொடுத்த வங்கி காசோலையினை 6 மாதம் கழித்து வசூலுக்காக போட்டேன். மேற்படி காசோலையானது ஆஜர் எதிரிகளின் 1ம் எதிரியான ஜெயராமனின் பெயரில் எனக்கு தரப்பட்டது. மேற்படி காசோலையானது எதிரி ஜெயராமனின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. மேற்படி காசோலை திருப்பப்பட்டதால் 1வது எதிரியின் மீது காசோலை மோசடி வழக்கினை நான் மயிலாடுதுறையில் உள்ள நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த வழக்கு 4 ஆண்டுகள் மேற்படி நீதிமன்றத்தில்நடந்தது. அதன் பிறகு அந்த வழக்கானது லோக் அதாலத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கு ஒரு வருட காலம் மேற்படி வழக்கு நடந்தது. மேற்படி லோக் அதாலத்தில் இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தார்கள். அந்த பேச்சு வார்த்தையின் முடிவில் ஆஜர் எதிரிகள் ரூ.6,50,000/- ஐ தருவதாக ஒப்புக்கொண்டார்கள். மேற்படி ரூ.6,50,000/- ஐயும் ஆஜர் எதிரிகள் கட்டாமல் காலம் கடத்தினர். அதன்பிறகு நிறைவேற்று மனு மூலமாக ரூ.10,000/-, ரூ.10,000/- ஆக இரண்டு தவணையும் அதன் பிறகு 3 வது தவணையாக ரூ.15,000/-, ம் 4 வது தவணையாக ரூ.10,000/-, ஐயும் மொத்தம் ரூ.45,000/- ஐ ஆஜர் எதிரிகள் என்னிடம் கொடுத்தனர். மீதி தொகை எதுவும் கட்டாமல் காலம் கடத்தி இதுநாள் வரை வேறு எந்த தொகையும் என்னிடம் திருப்பி கொடுக்கவில்லை. மேற்படி மயிலாடுதுறையில் நடைபெற்ற காசோலை மோசடி வழக்கானது திரும்ப ஜெயங்கொண்டம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. நான் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தினை 2007 ம் ஆண்டு முதல் ஆஜர் எதிரிகளிடம் வீட்டில் சென்று கேட்டபோது என்னை காசு பணம் என்று கேட்டு வந்தால் உன் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று 7, 8 அடியாட்களை வைத்துக்கொண்டு என்னை மிரட்டினார்கள். இனி பணம் காசு என்று என் வீடு தேடி வந்தால் உன்னை கொன்று விடுவோம் என்று மிரட்டினர். அதன்பிறகு நான் எதிரிகள் மீது ஆரம்பத்தில் உடையார்பாளையம் காவல்நிலையத்தில் புகார் மனுவினை கொடுத்தேன். அவர்கள் என்னுடைய புகாரினை பெற்று பார்த்து விட்டு ரூ.5,00,000/- த்திற்கு மேல் இருப்பதால் உங்களுடைய புகாரினை மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவிற்கு கொடுக்கும்படி அறிவுறுத்தினர். அதன்படி நான் அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவிற்கு சென்று புகார் மனுவினை கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும்புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்துஎன்னுடையதுதான். **(புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி 10 நபர்கள் ஒவ்வொருடமிருந்தும் சிங்கப்பூர் செல்வதற்காக பெற்ற தொகையான தலா ரூ. 2,00,000/- ம் மற்றும் 11 வது நபர்

V. Krishnamurthy

அவரிடமிருந்து பெற்ற தொகையான ரூ. 1,80,000/- னையும் மொத்த தொகையான ரூ. 21,80,000/- னையும் ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி ஜெயராமன் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் ஐசிஜசிஜ வங்கியில் உள்ள அவருடைய வங்கி கணக்கு எண்ணிற்கு எனக்கு சரியாக எத்தனை தவணைகளில் கொடுத்தேன் என்று ஞாபகத்தில் இல்லை. ஆனால் நான் ரூ. 7,15,000/- னை பல்வேறு தவணைகளில் ஆஜர் எதிரி ஜெயராமனின் வங்கி கணக்கில் செலுத்தினேன். மேற்படி எதிரிகள் அவர்களுக்கு தெரிந்த 5 நபர்களின் பெயர்களும், அவர்களின் ஐசிஜசிஜ வங்கி கணக்கு எண்களை என்னிடம் கொடுத்தார்கள். ஐசிஜசிஜ வங்கியில் சேமிப்பு கணக்கு எண் வைத்திருப்பவர்களின் பெயர் 1- ஈ.டி. லெட்சுமிபதி, 2-யுவன்சங்கர், 3- தனுசு முருகானந்தம், 4- கண்ணகி மற்றும் ஒருவரின் பெயர் எனக்கு ஞாபகத்தில் இல்லை. மேற்படி 5 நபர்களின் வங்கிக் கணக்கு எண்ணிற்கு ரூ. 2,06,000/- னை ஒவ்வொருவடைய வங்கிக்கணக்கு எண்ணிற்கு ஒரே தவணையில் பிரித்து பிரித்து செலுத்தினேன். மேற்படி நான் செலுத்திய ரூ. 9,21,000/- ற்கான வங்கியில் செலுத்திய செலான்கள் தான் என்னிடம் (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 02.06.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 20,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 07.06.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 25,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 25,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 21.06.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 49,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 26.06.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 35,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 28.06.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 20,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 07.07.2001 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 45,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 13.07.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 49,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 20.07.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 49,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 22.07.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 30,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 11.08.2006 ம் தேதி அன்று ஐசிஜசிஜ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ. 45,000/- னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு21.08.2006 ம் தேதி

V. Krishnamurthy

அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 45,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 25.08.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 45,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 23.08.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 49,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 08.09.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 49,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 22.09.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 25,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 06.10.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 49,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** (தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் நான் 1ம் எதிரி ஜெயராமனுக்கு 11.11.2006 ம் தேதி அன்று ஐசிஐசிஐ வங்கியில் அவருடைய கணக்கிற்கு ரூ, 47,000/– னை அனுப்பிய ரசீது **அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

முதல்விசாரணை அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை